வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதி கட்ட, அரசு மறு பரிசீலனை செய்தால் பொதுமக்களுக்கு நலமாக இருக்கும். எனவே, அரசு திருவாரூரிலே தங்கும் விடுதி கட்ட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் இப்போது உடனடியாக அவசரமாக தேவைப்படுகிற சூழ்நிலையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. திருவாரூர் தலைநகரமாக வந்ததற்குப் பிறகு அதைப் பரிசீலிக்கலாம்.

காரைக்குடியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் விடுதி கட்டும் திட்டம்

513—(*வினா எண் 18496) திரு. சிதம்பரம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் சுற்றுலாத் துறை மூலமாக விடுதி கட்ட திட்டமுள்ளதா ?

(ஆ) இல்லையெனில், சுற்றுலா விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் சாலையோர விடுதி ஒன்று கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

மதுராந்தகம்-திண்டிவனம் இடையே சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம்

514—(*வினா எண் 19456) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-விழுப்புரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம் - திண்டிவனம் இடையே போக்குவரத்து வாகனங்கள் நிற்கக்கூடிய வகையில் கழிப்பிட வசதி, உணவு விடுதி போன்ற வசதிகளுடன் கூடிய சாலையோர உணவு விடுதி ஏற்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுராந்தகம்-திண்டிவனம் இடையே, மேல்மருவத்தூரில், சாலையோர விடுதி ஒன்று கட்ட ஒரு கருத்துரு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.